



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "மிக்ஜாம் புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை ரூ.6000/ வழங்கும் பணிகளை துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தாலுக்கா திருமுல்லைவாயில் நேதாஜி நகர் நியாய விலை கடைக்கு உட்பட்ட நபர்களுக்கு முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ நிவாரண உதவித் தொகை ரூ.6000/ வழங்கினார். அருகில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார் மண்டல குழு தலைவர் அமுதா பேபி சேகர் ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ். ஆவடி கிழக்கு பகுதி செயலாளர் பேபி சேகர். மாமன்ற உறுப்பினர் பாலா. பிரகாஷ் மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### தொழிலாளர் துறையால் தயாரிக்கப்பட்ட

# கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் விழிப்புணர்வு குறும்படம்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் வெளியிட்டார்!

*சென்னை, டிச.18-*

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் குறித்தான விழிப்புணர்வு குறும்படத்தினை வெளியிட்டார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் 15.12.2023 அன்று தலைமைச் செயலகத்தில் தொழிலாளர் துறையால் தயாரிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் குறித்தான விழிப்புணர்வு குறும்படத்தினை வெளியிட்டார். கொத்தடிமைத் தொழிலாளர் முறை என்பது சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், நாட்டின் எதிர்காலத்திற்கும் ஒரு மிக பெரிய அச்சுறுத்தலாகவும், தடைக் கல்லாகவும் அமைந்துள்ளது. இந்த கொத்தடிமைத் தொழிலாளர் முறையை 2030ம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டிலிருந்து முற்றிலும் அகற்றிட தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது.

தொழிலாளர் துறையின் சீரிய அமலாக்க முயற்சிகளால், 01-04-2017 முதல் 30-11-2023 வரையில், 1612 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, ரூ.3.52 கோடி உடனடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, கொத்தடிமைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்களின் பேரில் சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. இதில் ஒரு அங்கமாக 2023-2024ம் நிதியாண்டில் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் குறித்தான விழிப்புணர்வு குறும்படத்தினை தயாரித்திட ரூ.4.00 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டு, இந்த ஒதுக்கீட்டில் இக்குறும்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. இக்குறும்படம் கொத்தடிமைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவோர் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இந்நிகழ்வின்போது தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த் மற்றும் கூடுதல் தொழிலாளர் ஆணையர் (நிர்வாகம்) திருமதி சி. ஹேமலதா ஆகியோர் உடனிருந்தனர்.





